# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2458/38 - 2025 ඔක්තෝබර් මස 15 වැනි බදාදා - 2025.10.15

*2458/38 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்கள்**

**சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)**

**101 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்**

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரிவு 101 (1) இனால் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்பு வசதியை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மூலதனப் பொருட்களின் பட்டியல் இறக்குமதியினை/ உள்ளூர் பெறுகையினை எளிதாக்குவதற்கு பிரிவுகள் 3, 4.v மற்றும் 5 இனை இரத்துச் செய்வதன் மூலம் அதன் பின்வரும் பிரிவுகளை மாற்றுவதன் மூலம் புதிய ஒழுங்குவிதிகளை பரிந்துரைப்பதற்கு 2018, ஓகத்து 10 ஆந் திகதிய 2083/33 ஆம் இலக்க, அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளை இதன் மூலம் மேலும் திருத்துகிறேன். இந்த ஒழுங்குவிதிகள் 2025, ஒற்றோபர் 15 அன்று முதல் பயன் வலுப்பெறுதல் வேண்டும்.

3. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பிணையளிக்கப்பட்ட குத வசதியின் நோக்கம், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில்முயற்சி ஒன்றினால், பாற்பொருள் உற்பத்தி வசதி, மருந்து உற்பத்தி வசதி, மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி வசதி, திடக்கழிவு முகாமைத்துவ வசதி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி அல்லது சேமிப்பு வசதி ஆகியவற்றை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக, அத்தகைய வசதியின் நிர்மாண காலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட வரிகள் மற்றும் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட மூலதனப் பொருட்களின் பட்டியலை இறக்குமதி செய்ய அல்லது உள்நாட்டில் பெறுகை செய்வதற்கு வசதியளிப்பதாகும்.

1A- PG 7290 - 428 (2025/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. (v) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கு குறைந்தபட்சம் ஒரு மெகாவாட் (1MW) மின் உற்பத்தி திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி வசதியை நிறுவுதல் அல்லது குறைந்தபட்சம் ஒரு மெகாவாட் மணிநேரம் (1MW h) திறன் கொண்ட எரிசக்தி சேமிப்பு அமைப்பு வசதியை நிறுவுதல்.

5. மேற்கண்ட துறைகளின் பட்டியலில் வசதியொன்றினை நிறுவுதல் என்பது, மேலே உள்ள குறைந்தபட்ச தகுதி அளவுகோள்களுக்கு உட்பட்டு, புதிய தயாரிப்பு/ உற்பத்தி வசதி அல்லது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்பு வசதியை நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி மேம்பாடு அல்லது உற்பத்தி திறன் மேம்பாட்டிற்காக ஏற்கனவே உள்ள தயாரிப்பு/ உற்பத்தி வசதியை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை மட்டுமே குறிக்கும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார,
அபிவிருத்திஅமைச்சு,
கொழும்பு – 01,
2025, ஒற்றோபர் 14.

EOG 10 - 0169